tnkalvi.online

No. of Printed Pages : **7**

5201

பதிவு எண்

தமிழ்

கால அளவு : **2.00** மணி நேரம்] [மொத்த மதிப்பெண்கள் : **100**

அறிவுரைகள் : (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

பகுதி - I

1. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டு எண்ணுடன் விடையையும் சேர்த்து எழுதுக. **3x1=3**

(i) தமிழ் எழுத்துச் சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டவர் :

(அ) பாரதிதாசன் (ஆ) தந்தை பெரியார்

(இ) வ.உ. சிதம்பரனார் (ஈ) பெருஞ்சித்தனார்

(ii) பசிவால் வாடும் _____ உணவளித்தல் நமது கடமை.

(அ) பிரிந்தவர்க்கு (ஆ) அலந்தவர்க்கு

(இ) சிறந்தவர்க்கு (ஈ) உயர்ந்தவர்க்கு

(iii) அயோத்திதாசர் நடத்திய இதழ் :

(அ) ஒருபைசாத் தமிழன் (ஆ) காலணாத் தமிழன்

(இ) அரையணாத் தமிழன் (ஈ) அரை பைசாத் தமிழன்

2. கோடிட்ட இடங்களை நிரப்புக. **3x1=3**

(i) உடல் எடை அதிகரிப்பதால் ஏற்படும் நோய்களுள் ஒன்று _____.

(ii) வானில் கரு _____ தோன்றினால் மழை பொழியும் என்பர்.

(iii) நம்மை _____ பொறுத்துக் கொள்ள வேண்டும்.

[Turn over

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-8-tamil-eslc-2021 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

3. கீழ்க்காணும் விளம்பரத்தைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக. **4x½=2**

மாபெரும் புத்தகக் காட்சி
ஏப்ரல் 13 முதல் 23 முடிய
பகல் 2 மணி - இரவு 9 மணி
இராயப்பேட்டை ஒய்.எம்.சி.எ. மைதானம்.
அனுமதி அனைவரும் வருக!
இலவசம் பயன் பெறுக!

வினாக்கள் :

(அ) விளம்பரம் எதனைப் பற்றியது ?

(ஆ) கண்காட்சிக்கான நுழைவுக் கட்டணம் எவ்வளவு ?

(இ) கண்காட்சி எத்தனை நாட்கள் நடைபெறுகிறது ?

(ஈ) கண்காட்சி எங்கு நடைபெறுகிறது ?

4. மொழி பெயர்க்கவும். **2**

(அ) Chief Minister (ஆ) Support

காது கேளாத மாணவர்களுக்கான மாற்று வினா : **2**

உரிய இடத்தில் தமிழெண்களை எழுதுக.

(அ) 23 _____ (ஆ) 36 _____

(இ) 42 _____ (ஈ) 51 _____

பகுதி - II
பிரிவு - 1

பின்வருவனவற்றுள் **எவையேனும் ஐந்து** வினாக்களுக்கு விடை தருக. **5x2=10**

5. உலகம் எவற்றால் ஆனது ?

6. சான்றோர்க்கு அழகாவது எது ?

7. யாருக்கு அழகு செய்ய வேறு அணிகலன்கள் தேவையில்லை ?

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-8-tamil-eslc-2021 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

8. பயிர்கள் வாட்டமின்றிக் கிளைத்து வளரத் தேவையானது யாது ?

9. பகத்சிங் கண்ட கனவு யாது ?

10. எது பெருமையைத் தரும் ?

11. தோல்வி எப்போது தூண்டுகோலாகும் ?

பிரிவு - 2

பின்வருவனவற்றுள் **எவையேனும் ஐந்தனுக்கு** விடையளிக்கவும். **5x2=10**

12. ஒலி எழுத்து நிலை என்றால் என்ன ?

13. விலை கொடுத்து வாங்க இயலாதவை எனச் சியாட்டல் கூறுவன யாவை ?

14. பனையோலையால் உருவாக்கப்படும் பொருள்கள் யாவை ?

15. கொங்கு நாட்டில் பாயும் ஆறுகள் யாவை ?

16. தமிழர் மருத்துவத்தில் மருந்துகளாகப் பயன்படுவன யாவை ?

17. அயோத்தி தாசரிடம் இருந்த ஐந்து பண்புகள் யாவை ?

18. அம்பேத்கர் தன் பெயரை ஏன் மாற்றிக் கொண்டார் ?

பிரிவு - 3

பின்வருவனவற்றுள் **எவையேனும் ஐந்தனுக்கு** விடையளிக்கவும். **5x2=10**

19. சந்திப்பிழை என்றால் என்ன ?

20. பா எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

[Turn over

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-8-tamil-eslc-2021 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

21. இரட்டுற மொழிதல் அணி எவ்வாறு பொருள் தரும் ?

22. இயல்பு புணர்ச்சியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

23. தெரிநிலை வினைமுற்று எவற்றைக் காட்டும் ?

24. எச்சம் என்றால் என்ன ? அதன் வகைகள் யாவை ?

25. எழுத்துகளின் பிறப்பு என்றால் என்ன ?

பகுதி - III

பிரிவு - 1

பின்வருவனவற்றுள் **எவையேனும் இரண்டனுக்கு** விடையளிக்கவும். **2x4=8**

26. தமிழ்மொழியை வாழ்த்திப் பாரதியார் கூறும் கருத்துக்களை எழுதுக.

27. மழைச்சோறு எடுத்த பின் எவ்வாறு மழை பெய்தது ?

28. இந்தியத்தாய் எவ்வாறு காட்சியளிக்கிறாள் ?

பிரிவு - 2

பின்வருவனவற்றுள் **எவையேனும் இரண்டனுக்கு** விடையளிக்கவும். **2x4=8**

29. பள்ளிக் குழந்தைகளுக்கு மருத்துவர் கூறும் அறிவுரைகள் யாவை ?

30. அம்பேத்கரின் முதல் தேர்தல் வெற்றி குறித்து எழுதுக.

31. நோய்கள் பெருகக் காரணம் என்ன ?

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-8-tamil-eslc-2021 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

பிரிவு - 3

32. பொருத்துக. **4x1=4**

(i)	நடந்து	-	முற்றெச்சம்
(ii)	பேசிய	-	குறிப்புப் பெயரெச்சம்
(iii)	எடுத்தனன் உண்டான்	-	பெயரெச்சம்
(iv)	பெரிய	-	வினையெச்சம்

பிரிவு - 4

33. **பின்வரும்** வினாக்களுக்கு விடையளிக்கவும். **6x1=6**

(i) சரியான மரபுச் சொல்லை எழுதுக.

பால் _____ (குடி/பருகு)

(ii) மாடு வயலில் புல்லை மேய்ந்தது.

- இத்தொடரிலுள்ள வினைமுற்றை எழுதுக.

(iii) மலர் பானையை வனைந்தாள்.

இத்தொடர் _____ பொருளைக் குறிக்கிறது.

(அழித்தல்/ஆக்கல்)

(iv) உரிய இடங்களில் நிறுத்தற்குறி இடுக.

திரு.வி.க எழுதிய பெண்ணின் பெருமை என்னும் நூல் புகழ் பெற்றது

(v) இலக்கண குறிப்பு தருக.

வளர்தமிழ்

(vi) இரண்டு தொடர்களை ஒரே தொடராக்குக.

எனக்கு பால் வேண்டும். எனக்கு பழம் வேண்டும்.

[Turn over

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-8-tamil-eslc-2021 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

பிரிவு - 5

34. பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும். **5x1=5**

நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின்
இருதிணை ஐம்பால் இயல்நெறி வழாஅமைத்
திரிவுஇல் சொல்லோடு தழாஅல் வேண்டும்
மரபுநிலை திரிதல் செய்யுட்கு இல்லை
மரபுவழிப் பட்ட சொல்லின் ஆன
மரபுநிலை திரியின் பிறிது பிறிதாகும்.

- தொல்காப்பியர்.

வினாக்கள் :

(அ) இரு திணைகள் எவை ?
(ஆ) ஐம்பூதங்கள் யாவை ?
(இ) 'விசும்பு' என்பதன் பொருள் யாது ?
(ஈ) ஐம்பால் - விரித்து எழுதுக.
(உ) மேற்கண்ட பாடல் இடம்பெற்ற நூல் எது ?

பகுதி - IV

பின்வருவனவற்றுள் **ஏதேனும் ஒன்றிற்கு** விரிவான விடையளிக்கவும். **1x5=5**

35. மனித யந்திரம் கதையை மீனாட்சி சுந்தரம் கூறுவதாக மாற்றி எழுதுக.

36. காற்றுக் கருவிகள் குறித்த செய்திகளைத் தொகுத்து எழுதுக.

37. மூளையின் வலது, இடது பாகங்களின் செயல்பாடுகள் பற்றித் தொகுத்து எழுதுக.

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-8-tamil-eslc-2021 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

பகுதி - V

பிரிவு - 1

38. **கட்டுரை வடிவில்** விடையளிக்கவும். **1x7=7**

(அ) உழைப்பே உயர்வு

அல்லது

(ஆ) கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்

பிரிவு - 2

39. **பின்வரும்** வினாவிற்கு விடையளிக்கவும். **1x7=7**

(அ) விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற உன் நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம் எழுதுக.

அல்லது

(ஆ) இருப்பிடச் சான்று வேண்டி வட்டாட்சியருக்கு விண்ணப்பம் எழுதுக.

பகுதி - VI

அடிமாறாமல் எழுதுக. **2+2+3+3=10**

40. 'நவில் தொறும் .....' எனத் தொடங்கும் குறள்.

41. 'விடல் .....' என முடியும் குறள்.

42. கற்றோர்க்கு ..... எனத் தொடங்கும் நீதிநெறி விளக்கப்பாடல்.

43. 'ஒன்றே குலம்' ..... எனத் தொடங்கும் திருமூலரின் பாடல்.

- o O o -

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-8-tamil-eslc-2021 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share